(2021) 3 எஸ்சிஆர் 364

நீதியசர் திரு. வி. ஈஸ்வரய்யா (ஓய்வு)

எதிர்

இந்திய ஒன்றியம் மற்றும் பலர்

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6100/2021

2021 ஏப்ரல் திங்கள் 12 ஆம் நாள்

மாண்புமிகு நீதியரசர் திரு. அஷேக் பூஷன்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சுபாஷ் ரெட்டி

பொது நல வழக்கு – நீ.பே.மனுவில் வழங்கிய உத்தரவை வினவி நீ.பே.மனுவில் தரப்பினர்களாக அல்லாதவர் இந்த சிறப்பு அனுமதி மனுவை தாக்கல் செய்தார் – பொ.ந.வ–இன் உண்மைத் தன்மையை வினவி உயர் நீதிமன்றத்தில், உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்து, உயர் நீதிமன்றத்தை அவதூறு செய்யும் மற்றும் அரசியல் ஆதாயம் தேட அரசியல்வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற வாதத்தை

வைத்தார் – உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஈ. (இந்த சிறப்பு அனுமதி மனுவில் மனுதார்ர்) இதேபோன்ற குறைகளை தலைமை நீதியரசருக்கு எதிராகக்கூறி ஜனாதிபதி அனுப்பிள்ளது என மேலும் கூறப்பட்டுள்ளது மற்றும் ஓய்வுக்குப்பின் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஓய்வுக்குப்பின் பதவி பெற்றுள்ளார் என்றும் , சங்கம் என்ற போர்வையில் உயர் நீதிமன்றத்தை அவமதித்து மாநில அரசுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது – முதல் நிலை ஆட்சேபணையை உயர் நீதிமன்றம் கேட்டு, தீர்ப்புக்காக அந்த விடயத்தை முடித்தது – நீ.பே. மனு வேண்டுமென்றே அலைக்கழிக்க மற்றும் ஆதாயம் கருதியும் போடப்பட்டுள்ளது எனக் கூறி அவரது உறுதி ஆவணத்துடன் வழக்கிடை விண்ணப்ப எண் 7/2020 பின்னர் எஸ்ஆர் ஆல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது – அதன் குறைபாடுகளை மாறக்க, நீதித்துறைக்கு எதிராக, அரசுப் பதவியுள்ளவர் ஒழுக்கக்கேடான பிரச்சிரத்தை மேற்கொண்டுள்ளார் என உறுதி ஆவணத்தில் மேலும் வாதுரைக்கப்பட்டது, அதில் அரசின் கைகளில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் பகடைக்காயாக இருந்து கொண்டு , அவர்களது கூற்றில், சில

அமைப்புகளின் தோற்றத்தில், சில ஆதாயம் பெறும் நபர்கள், நீதித்துறையின் நேர்மை, நியாயம் மற்றும் கௌரவத்திற்கு பங்கம் விளைவிக்க நீ.பே. மனுக்களை தாக்கல் செய்துவருகின்றனர் – பத்தி 8 இல், முன்னாள் ஓய்வு பெற்ற நீதிபதி அவரிடம் 20.7.2020 இல் பேசியதாகவும் மற்றும் ஆகில இந்திய பிற்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் அவருக்குத் தெரியுமா எனக் கேட்டதாகவும் கூறப்பட்டுள்ளது – உறுதி ஆவணத்துடன் ஒலிப்பதிவுடன்கூடிய அந்த உரையாடலின் எழுத்துவடிவமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது – விரலியில் இருந்த உரையாடலின் நியாயமானதா/அதிகாரபூர்வமானதா என்பதை அறிய, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மூலம் ஒரு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி விசாரணை செய்து கண்டுபிடிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கேட்டுக்கொண்டது – உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஈ சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்துள்ளார் – இந்த நீதிமன்றம் அவருக்கு கால அவகாசம் தந்துள்ளது – மனுதாரர் உறுதி ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்து 20.07.2020 தேதியிட்ட உரையாடலை

ஒப்புக்கொண்டுள்ளார், அவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட இணைப்பு பி16 ஆக ஒலிநாடாவில் ஆங்கில மொழிபெயர்ப்பின் திருத்தப்பட்ட வரிவடிவத்தினையும் கூட தாக்கல் செய்துள்ளார் – எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையால் உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதியின் விசாரணையைத் தொடர எந்தக் காரணமும் இல்லை – இணைப்பு பி16 இல் சொல்லப்பட்ட அளவிற்கு வரிவடிவத்தின் அதிகாரபூர்வமானது மற்றும் சரியானது என்ற அளவில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியிடமிருந்து அறக்கை கோரும் உயர் நீதிமன்றத்தின் உத்தரவு தொடர அனுமதிக்கப்படவேண்டியதில்லை – நீ.பே. மனுதாரரின் கூற்றுப்படி பொ.ந.வ. நிலைநிற்றல் தவிர பிற விடயத்தில் எவ்வித எல்லையும் உயர் நீதிமன்றம் வைத்திருக்கவேண்டியதில்லை மற்றும் உயர் நீதிமன்றம் முன் தாக்கல் செய்யப்பட்ட 20.7.2020 தேதியிட்ட உரையாடல் அதுபோல் கோரப்பட்ட விசாரணை அறிக்கை மேற்சொன்ன காரணத்திற்காக மட்டும்மே தற்போதைய 20.7.2020 தேதியிடப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பு வரிவடிவம் மனுதாரரால் மட்டுமே இணைப்பு

16 ஆக தாக்கல் செய்யப்பட்டு நீ.பே. மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட, அந்நிலையில், தேவையென மேற்சொன்ன வரிவடிவத்தை குறிப்பிட உயர் நீதிமன்றம் நினைத்தால், அது தற்போதைய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு கொடுத்த பின்னர் மட்டுமே அது செய்யப்படலாம்.

சிறப்பு அனுமதி மனுவை தீர்வு செய்த நீதிமன்றம் தீர்மானித்த்தாவது

1. விரலியில் அடங்கியுள்ள உரையாடல்கள் அதிகாரப்பூர்வமானதா / உண்மையானதா என்பதைக் கண்டறிய வரிவடிவம் குறித்து விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.வி. ரவிந்திரன் விரலியில் உள்ள உரையாடல் அதிகாரபூர்வமானதா / உண்மையானதா என்பதை குறித்து அறிக்கை சமர்ப்பிக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். எனவே, விரலியில் உள்ள உரையாடல் அதிகார பூர்வமானதா / உண்மையானதா என்பதைக் கண்டறிவது இந்த விசாரணை உத்தரவுக்கான நோக்கம் மற்றும் காரணமாகும். 11.01.2021 தேதியிட்ட உத்தரவில் மனுதாரருக்கு இந்த நீதிமன்றம் கால

அவகாசம் வழங்கியுள்ளது, மனுதாரர் உறுதி ஆவணம் தாக்கல் செய்து, 20.07.2020 தேதியிட்ட உரையாடலை ஒப்புக்கொண்டுள்ளார் மற்றும் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒலி நாடாவின் ஆங்கில மொழி பெயர்ப்பின் திருத்தப்பட்ட வரிவடிவத்தினை இணைப்பு பி 16 ஆக் தாக்கல் செய்துள்ளதால், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் உத்தரவிட்டபடி, நீதிபதி ஆர்.வி. ரவீந்திரனின் விசாரணையைத் தொடர அனுமதிக்க நாங்கள் எந்தக் காரணமும் காணவில்லை. இணைப்பு பி.16 இல் கூறப்பட்டுள்ளவாறு அந்த அளவு வரிவடிவம் அதிகார பூர்வமானது மற்றும் உண்மையானது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால், நீதிபதி ஆர்.வி. ரவிந்திரயிடமிருந்து அறிக்கை கோரும் உத்தரவு தொடர அனுமதிக்கத்தக்கத் தேவையில்லை என நாங்கள் கருதுகிறோம். அவ்வாறே நாங்கள் உத்தரவிடுகிறோம். (பத்தி 12)

2. முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணம் பத்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் மீது முடிவு செய்யும் அளவு தவிர,

அசல் நீதிப்பேராணை மனுவிலுள்ள பிரச்சினைகள் மீதான விசாரணையில் எந்த நேரடி கருத்தும் இராது என்பதை அதன் தீர்ப்புரையில் உயர் நீதிமன்றம் தெளிவாகக் கருத்துரைத்துள்ளது. பொ.ந.வ. நிலைக்குந்தன்மை குறித்து முதல் நிலை ஆட்சேபனையின் கேட்புகையை உயர் நீதிமன்றம் 31.7.2020 அன்று முடித்தது, நீ.பே. மனுவை மீண்டும் விசாரிக்க வ.வி. எண் 7 & 8/200 தாக்கல் செய்யப்பட்டபோது, நீ.பே. மனு நிலைக்கத்தக்கதா என் வினா மட்டுமே உயர் நீதிமன்றத்தின் முன்னிருந்தது. நீ.பே. மனுதாரரின் கூற்றுப்படி பொ.ந.வ. நிலைநிறுத்துவது தவிர பிற விடயத்தில் எவ்வித எல்லையும் உயர் நீதிமன்றம் வைத்திருக்கவேண்டியதில்லை, உயர் நீதிமன்றம் முன் தாக்கல் செய்யப்பட்ட 20.07.2020 தேதியிட்ட உரையாடல் அது போல் கோரப்பட்ட விசாரணை அறிக்கை மேல்சொன்ன காரணத்திற்காகத்தான் என நாங்கள் கருதுகிறோம். தற்போது 20.7.2020 தேதியிட்ட மொழிபெயர்ப்புக்குபின் வரிவடிவும் இணைப்பு பி 16 ஆக மனுதாரராலேயே தாக்கல் செய்யப்பட்டு

ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில் தேவையெ மேல்சொன்ன வரி வடிவத்தை குறிப்பிட உயர் நீதிமன்றம் நினைத்ததால் அது தற்போதைய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு கொடுத்த பின்னர் மட்டுமே செய்யப்படலாம். (பத்திகள் 13, 14, 15)

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு , சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6100/2021.

அமராவதியிலுள்ள, அந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் நீ.பே (பே.ந.வ) எண் 168/2020–இல் 13.08.2020 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

வழக்குரைஞர்கள்

பிரசாந்த் பூஷன், செல்வி. செலில் டி சௌசா

...மேல்முறையீட்டாளருக்காக

சித்தார்த் லூத்ரா, மூத்த வழக்குரைஞர், செல்வி கரிமா பஜாஜ், நிகில் பாமல், ஷிஸாம் உறஸ்மி, அன்மேல் கேட்டா, அக்ஷட் குப்தா, ஸீஷன் மெகமூத், அனிருத் வாத்வா, ஷங்கர் வினோத், எம்.பி. வினோத், விபின் நாயர், கார்த்திக் ஜெய்சங்கர், அரின்டம் கோஷ், அன்ஸுமான் பகதூர், பி.வி. பலராம் தாஸ் ... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அஷோக் பூஷன் அவர்கள்

இந்த சிறப்பு அனுமதி மனுவானது, நீதிப்பேராணை மனு பே.ந.வ. எண் 168 2020 இல் 13.08.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை வினவி தரப்பினர்களாக அல்லாத மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டது.

2. சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்வதற்கான விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டது.

3. இந்த சிறப்பு அனுமதி மனுவில் அறிவிப்பு வழங்கியுள்ளோம், ஆயினும், நீதிப்பேராணை மனுதாரரான 5 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்

உயர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி 13.01.2021 அன்றும் எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்தார்.

4. இந்த சிறப்பு அனுமதி மனுவை தீர்மானிப்பதற்கு தேவையான வழக்கு சங்கதிகளின் சுருக்கம்:–

4.1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், சிறுபான்மை மாவணர்கள் கூட்டமைப்பான 5 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 1860, சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம், அது பின்வரும் பரிகாரங்களை கோரி நீதிப்பேராணை மனு எண் 1682020 இல் ஒரு பொது நல வழக்கை தாக்கல் செய்தது :–

I) கோவிட் 19 நோய்த் தொற்று மேலும் பரவாமல் தடுக்கும்போருட்டு தனது அமைப்பு மற்றும் அரசு எந்திரத்துடன் ஒருங்கிணைந்து சிறப்பாக செயல்பட அதன் வழி நெறிமுறைகளை உண்மையான அக்கறையில்

பின்பற்ற 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடவும்

ii) கோவிட் 19 தோற்று மேலும் பரவாமல் தடுக்க 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை கடுமையாகப் பின்பற்றவும், அரசு எந்திரங்களை திறம்பட செயலாற்றி அவர்களது வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றவும் 4 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடவும்

iii) கோவிட் 19 தொற்று மேலும் பரவாமலிருக்க 1, 4 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை கடுமையாகப் பின்பற்ற 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடவும்

iv) கோவிட் 19 தொற்று மேலும் பரவாமல் தடுக்க 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் வளாகத்தை சிவப்பு

மண்டலமாக கட்டுப்பாடு மண்டலமாக விளம்புகை செய்ய 4 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடவும்.

v) இறுதியாக, 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான தலைமைப் பதிவாளர் (பொறுப்பு) திரு. பி. ராஜசேகர் 24.6.2020 அன்றும் இறந்தது, வி.ஆர். பிரிவில் உதவியாளராக பணியாற்றியவர் மற்றும் கோவிட் 19 சோதனை நேர்மறையாகயுள்ள 30 பணியாளர்கள் ஆகியவற்றுக்கு வழிவகுத்த சம்பவங்கள் குறித்து ஒரு மத்திய மற்றும் நடுநிலை முகைமையால் விசாரணை மேற்கொள்ளப்பட 1 மற்றும் 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடவும்

(vi) கோவிட் 19 தொற்று மேலும் பரவாமலிருக்க சம்பந்தப்பட்ட எல்லோருடைய நலன் கருதியும், குறைந்தது இருவாரங்களுக்கு ஊரடங்கு உத்தரவு போட்டும் துணை இரானுவப்படையினரை தேவை ஏற்பட்டால் வரவழைத்து,

தேவையான நகரும் மருத்துவ குழு அமைத்து, அத்தியாவசிய பொருள் விநியோகக் குழு அமைத்தும் பரிசீலனை செய்ய 1 மற்றும் 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடவும்.

4.2. 3–ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான, ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் சார்பாக தலைமைப் பதிவாளரால் 30.07.2020 அமன்று முதல் நிலை எதிர் ஆவணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த முதல் நிலை எதிர் ஆணையுறுதியாவணத்தில், பொதுநல வழக்குப் தாக்கல் செய்யும் சங்கத்தின் நிலை குறித்து வினா எழுப்பப்பட்டது. நிலைக்கத்தக்க பொது நலன் உடைய பொ.ந.வ. அல்ல அந்த பொ.ந.வ என வாதிடப்பட்டது. முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணத்தின் பத்தி 13 இல், உயர் நீதிமன்றத்தின் கௌரவத்தை கெடுக்கவும், அரசியல் ஆதாயம் தேடவும் அரசியல்வாதியால் அந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. முன்னாள் நீதிபதி ஈஸ்வரய்யா (இந்த சிறப்பு அனுமதி மனுவின் மனுதாரர்) இதே

புகார்களைக் கூறி தலைமை நீதிபதிக்கெதிராக இங்கு புகாரும் சமர்ப்பித்துள்ளார் என வாதிடப்பட்டது. மேலும், ஓய்வுக்குப் பிறகு நீதியரசர் ஈஸ்வரய்யா ஓய்வு காலப் பதவியை பெற்று, அந்த ஓய்வு காலப் பதவியை பெற்றபின் பிற்படுத்தப்பட்டோர் சங்கம் என்ற பொர்வையில் மாநில அரசை ஆதரிக்கவும், உயர் நீதிமன்றத்தின் கௌரவத்தை கெடுக்கவும் விரும்பினார் என்று பத்தி 13 இல் வாதுரைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன உட்கருத்தை நிறைவேற்ற, தீய நோக்குடன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணத்தில் வாதுரைக்கப்பட்டது.

4.3. முதல் நிலை எதிர்ப்புரையை விசாரித்த உயர் நீதிமன்றம், 31.07.2020 அன்று வழக்கின் தீர்ப்புரை என்று முடிவு செய்தது. தனிப்பட்ட ஆதாயத்திற்காகவும், தீய நோக்குடனும் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அது அலைக்கழிப்பானது என்றும் குறிப்பிட்டு எஸ்.

ராமகிருஷ்ணண் என்பவர் ஆணையுறுதி ஆவணத்துடன் வ.வி.எண் 7/2020 ஐ தாக்கல் செய்தார். அதன் குறைபாடுகளை மறைக்க, நீதித்துறைக்கு எதிராக ஆரசுப் பதவியிலுள்ளவர் ஒழுக்கக்கேடான பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளார் என உறுதி ஆவணத்தில் மேலும் வாதுரை செய்யப்பட்டது, அதில் அரசின் கைகளில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் நீதிபதி வி. ஈஸ்வரய்யா போன்றோர் பகடைக்காயாக இருந்து கொண்டு, அவர்களது கூற்றில் சில அமைப்புகளின் தோற்றத்தில், சில ஆதாயம் பெறும் நபர்கள், நீதித் துறையின் நேர்மை, நிாயம் மற்றும் கௌரவத்திற்கு பங்கம் விளைவிக்க நீ.பே. மனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர்.

4.4. நீதியரசர் திரு. வி. ஈஸ்வரய்யா தலைவராக உள்ள அதில இந்திய பிற்பட்டோர் கூட்டமையின் செயல் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட 29.6.2020 தேதியிட்ட மனு இந்த உறுதி ஆவணத்தில் கூறப்படுகிறது. பத்தி 8 இல், நீதிபதி வி.

ஈஸ்வரய்யாவின் தனிச் செயலாளர் தனது கைப்பேசியில் 20.7.2020 அன்று அவரை (திரு. எஸ். ராம கிருஷ்ணன்) அழைத்து, ஓய்வு பெற்ற நீதிபதி வி. ஈஸ்வரையா அவருடன் பேச விரும்புவதாக்கூறி, அவரது தொலைபேசி எண்ணை அளித்துள்ளதாக வாதிடப்பட்டது. உரையாடலின்போது, 29.06.2020 தேதியிட்ட அகில இந்திய பிற்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பின் கடிதம் குறித்து அவருக்குத் தெரியுமா என ஓய்வு பெற்ற நீதிபதி அவரைக் கேட்டுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது நீதிமன்றத்தின் பார்வைக்காக, உறுதி ஆவணத்துடன், ஒலிப்பதிவுடன்கூட அந்த உரையாடலின் வரிவடிவமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீ.ம.பே.பொ.ந.வ. எண் 168 / 2000 மீள ஏற்று சரியெனக் கருதும் உத்தரவைப் பிறப்பிக்க மனுதாரர் வேண்டுரைத்தார்.

4.5 பொது நலம் கருதி நீ.பே.பொ.ந.வ. எண் 168/2020 இல் தலையிட அனுமதிக்குமாறு மனுதாரர் (எஸ்.ராமகிருஷ்ணன்

மனுதாரர்) கோரிக்கை வைத்து திரு. எஸ். ராமகிருஷ்ணன் வ.வி. எண் 8/ 2020 தாதக்கல் செய்துள்ளார்.

4.6. ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரின் உறுதி ஆவணத்துடன் 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வ.வி. எண் 9/2020 ஐ தாக்கல் செய்தார். வ.வி. மூலம், தேவையற்ற முரண்பாட்டினை தவிர்ப்பதற்காக 30.07.2020 தேதியிட்ட முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணம் பத்தி 13 இல் உள்ள தொடர் நடவடிக்கையின்போது ஆந்திரப்பிறகேச மாநில தலைமை வழக்குரைஞர் ஆட்சேபணைகளை எழுப்பியுள்ளார் என 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தெரிவித்து, 30.7.2020 தேதியிட்ட முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணத்தின் பத்தி 13 ஐ நீக்கிடவும், உறுதி ஆவணத்தில் பத்தி 4 இல் கூறப்பட்டவைகளை பத்தி 13 க்குப் பதிலாக ஏற்கவும் கோரியுள்ளார். 30.07.2020 தேதியிட்ட முதல் நிலை எதிர்

உறுதி ஆவணத்தின் திருத்தத்திற்கான மனுவானது 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டது.

4.7. நீ.பே. மனுதாரர் வ.வி. எண்கள் 7 மற்றும் 8 க்கு எதிர் ஆணையுறுதி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். 13.8.2020 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில், விரலியில் உள்ள உரையாடலின் சரியான தன்மை / அதிகாரத் தன்மை ஆகியவற்றைக் கண்டுபிடிக்க விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.வி. ரவீந்தரன், விரலியில் உள்ள உரையாடலின் சரித் தன்மை மற்றும் அதிகாரத் தன்மையை கண்டுபிடிக்க ஒரு விசாரணை நடத்துமாறு உயர் நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. உயர் நீதிமன்றம் முடிவு :–

".....எனவே விரலியில் உள்ள உரையாடலின் அதிகாரப்பூர்வத் தன்மை / உண்மைத் தன்மையை கண்டுபிடிக்க விசாரணைக்கு உத்தரவிட தகுதியான வழக்கு

எண் நாங்கள் காண்கிறோம். எனவே, விரலியில் உள்ள உரையாடலின் அதிகாரபூர்வத் தன்மை / உண்மைத் தன்மையை கண்டறிய ஒரு விசாரணை நடத்த உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர்.வி. ரவீந்தரனை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்……"

4.8. விசாரணை குறித்து அதே பத்தியில் உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கூறிப்பிட்டது.

"… உரையாடலின் அதிகாரபூர்வத் தன்மையையும் / உண்மைத் தன்மையையும், அன் பின்புலத்திலுள்ள மூன்றாம் நபரின் ஆதாயத்தையும் கண்டுபிடிக்க மட்டும் விசாரணை இருப்பினும் முதன்மை நீதிப் பேராணை மனுவில் உள்ள பிரச்சினையில் இது எவ்வித நேரடி விடயமும் உடையதாக இல்லை, முதல் நிலை எதிர் ஆணையுறுதியாவணம் / முதல் நிலை எழுத்து மூல ஆட்சேபனைகள் பத்தி 13 இல் சொல்லப்பட்ட புகார்களை முடிவு செய்யும்

அளவுக்குதானேயன்றி, பிற எந்த சார்ந்த நடவடிக்கைகளில் பரிசீலிக்க எடுத்துக்கொள்ளப்படும்...."

4.9. பதிவுகள் மற்றும் விலலி இருமுறை எழுத்து ஒரு அத்தகைய நகலினை நீதிபதி ஆர்.வி. ரவீந்திரனுக்கு அனுப்புமாறு உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் உத்தரவில் சொல்லப்பட்ட நீதிபதி ரவீந்திரனுக்கு கோரக்கை கீழ்க்கண்ட விளைவை கொண்டுள்ளது :–

> "விரலியில் உள்ள உரையாடலின் அதிகார பூர்வ தன்மை / உண்மைத் தன்மை குறித்த விசாரணை அடிப்படையில், உரையாடல் செய்த நபர்கள் மற்றும் மூன்றாம் நபர் / நபர்களின் வெளிப்படாத ஆதாயம் ஆகியவை குறித்து இந்த நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற

மாண்புமிகு நீதியரசர் ஆர்.வி. ரவிந்திரனை நாங்கள் கோருகிறோம்.

4.10. உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர்.வி. ரவீந்திரன் வழியாக விசாரணைக்கு உத்தரவிட்ட உயர் நீதிமன்றத்தின் மேற்சொன்ன உத்தரவிற்கு எதிராக பாதிக்கப்பட்டு, அந்திரப் பிரதேஷ் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தற்காலிக தலைமை நீதிபதி இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

5. இந்த சிறப்பு அனுதி மனு 11.01.2021 அன்றும் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் திரு. ராம கிருஷ்ணனுடன் பேசிய 20.7.2020 தேதியிட்ட வரிவடிவம் கட்டுகளுடன் இணைப்பு பி.16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை, வாதங்களின்போது மமனுதாரரின் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பிரஷாந்த் பூஷன் கூறினர். அவர் உரையாடலில் ஏதும் பிரச்சினை எழுப்பவில்லை மற்றும் 20.4.2020 தேதியிட்ட உரையாலைப்

பொறுத்தவரை அனுமதிக்கப்படவேண்டும் என வாதுரைத்தார். இந்த நீதிமன்றத்தால் 11.1.2021 அன்று கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள;–

"மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பிரஷாந்த் பூஷன், மேல்முறையீட்டாளர் திரு. ராமகிருஷ்ணணுடன் மேற்கொண்ட பேச்சின் 20.07.2020 தேதியிட்ட எழுத்துப் படி இணைப்பு பி 16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சமர்ப்பித்தார்.

மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் உரையாடலில் பிரச்சினை ஏதும் எழுப்பவில்லை. மேற்சொன்ன உரையாடல் தொடர்பாக மனுதாரரின் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்ய அனுமதிக்கப்படவேண்டும் என அவர் வேண்டுரைத்தார்.

உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டும்.

18.01.2021 அன்று இந்த விடையத்தை பட்டியலிடுக"

6. 11.01.2021 தேதியிடப்பட்ட இந்த நீதிமன்றத்தின் உத்தரவின் தொடர்ச்சியாக, 14.01.2021 தேதியிட்ட உறுதி ஆவண்ம மனுதாரரான நீதிபதி வி. ஈஸ்வரைய்யா (ஓய்வு) ஆல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேச தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட மாவட்ட முன்சீப் குற்றவியல் நடுவர் திரு. எஸ். ராம கிருஷ்ணன் 20.07.2020 அன்று வாட்ஸ்சப்பில் அவரை அழைத்துள்ளது அந்த உறுதி ஆவணத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், விரலியில் உள்ள உரையாடல் அதே சரியான உரையாடலா என அவரால் சொல்ல முடியாது என அவர் கூறியுள்ளார். உயர் நீதிமன்றம் முன்பு திரு. எஸ் ராம கிருஷ்ணனால் தாக்கல் செய்யப்பட்ட ஒலிவடிவ உரையாடலின் வரிவடிவத்தை உறுதி ஆவணம் பத்தி 4 இல் நீதிபதி வி. ஈஸ்வரையா பிறச்சினை எழுப்பியுள்ளார். இருப்பினும் இணைப்பு 16 ஆக பக்கங்கள் 134–154 வரை விரலியில் உள்ள பேச்சின் திருத்தப்பட்ட வரிவடிவத்தை வழங்குவதாக அவர் சமர்ப்பித்தார். உறுதி ஆவணம் பத்தி 4 சி பின்வருமாறு :–

"4 சி. ..... சிறப்பு அனுமதி மனு தாள் கட்டில் இணைப்பு பி–16 ஆக 134–154 பக்கங்களில் உள்ள எனக்கு வழங்கப்பட்ட விரலியில் உள்ள ஒலிநாடாவின் ஆங்கில மொழி பெயர்ப்பின் திருத்தப்பட்ட வரிவடிவத்தை நான் தந்துள்ளேன். உயர் நீதிமன்றத்தில் திரு. ராமகிருஷ்ணன் தாக்கல் செய்த உரையாடலின் ஒலி வடிவத்தின் வரிவடிவம் என நான் வலியுறுத்துகிறேன்....."

7. மேல் முறையீட்டாளருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் எதிர் மேல்முறையீட்டாளர் எண் 5 இன் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் மற்றும் இந்திய அரசு சார்பாக தலைமை வழக்குரைஞர் திரு. துஷ்ஷார் மேத்தா ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

8. வழக்கில் தலையிட அனுமதி கோரி இரண்டு விண்ணப்பங்களான அதாவது., வ.வி. எண் 3926/2021 மற்றும் 3927/2021 மற்றும் வ.வி. எண் 1215/2021 ஆகிய இரண்டு விண்ணப்பங்கள் குறுக்கீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டன.

9. இந்த சிறப்பு அனுமதி மனுவில் உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தரவு காரணமாக வழக்கிடை விண்ணப்பங்கள் எண் 3926/2021 மற்றும் 3927/2021 மற்றும் வ.வி. எண் 1215/2021 ஆகியவற்றை அனுமதிக்க எந்த காரணமும் நாங்கள் காணவில்லை. எனவே, வழக்கிடை விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை.

10. 31.7.2020 தேதியிட்ட முதல் நிலை ஆட்சேபனையில் நீ.பே. மனு ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கும்போது, தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட உரிமையியல் நீதிபதி திரு. எஸ். ராம கிருஷ்ணா வற்புறுத்தலால் வ.வி. எண் 7/2020 மற்றும் வ.வி. எண் 8/2020 ஆகியவற்றை உயர் நீதிமன்றம் ஏற்றிருக்கக்கூடாது என்று மனதாரரின் கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்தார். மனுதாரருக்கும், ராமகிருஷ்ணாவுக்கும் இடையே உள்ள தனியார் உரையாடல் நீ.பே. மனுவின் விடயமாக ஏற்பட்டிருக்கக்கூடாது எனச் சமர்ப்பிக்கப்பட்டது. நீ.பே. மனுவின் விடயம் மேற்சொன்ன உரையாடலில் உள்ளதிலிருந்து முழுதும் மாறுபட்டதாகும். நீதிபதி வி. ஈஸ்வரய்யாவிற்கு உயர் நீதிமன்றத்தால் அறிவிப்பு வழங்கப்படவில்லை மற்றும் இயற்கை நியதிக்

கோட்பாடுக்கு மாறாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வாய்ப்பு தராமல் 20.07.2020 தேதியிட்ட வரிவடிவத்திற்கு விசாரணைக்கு உத்தரவிட்டு உயர் நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பித்திருக்கக்கூடாது என சமர்ப்பித்துக் கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் வரிவடிவத்தினை ஒப்புக்கொண்டு பக்கம் 134–154 இல் இணைப்பு பி 16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், விசாரணை நடத்தக் கோரி நீதிபதி ஆர்.வி. ரவிந்திரமனை விசாரணை நடத்துமாறு செய்யவேண்டிய தேவையில்லை என கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்துள்ளார்.

11. நாங்கள் தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களை பரிசீலித்து, பதிவாவணங்களின் சான்றாவணத்தை நுண்ணாய்வு செய்தோம்.

12. மேற்கூறிப்பிட்டவாறு, விரலியில் அடங்கியுள்ள உரையாடல்கள் அதிகாரப்பூர்வமானதா / உண்மையானதா என்பதைக் கண்டறிய வரிவடிவம் குறித்து விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.வி. ரவிந்திரன் விரலியில்

உள்ள உரையாடல் அதிகாரபூர்வமானதா / உண்மையானதா என்பதை குறித்து அறிக்கை சமர்ப்பிக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். எனவே, விரலியில் உள்ள உரையாடல் அதிகார பூர்வமானதா / உண்மையானதா என்பதைக் கண்டறிவது இந்த விசாரணை உத்தரவுக்கான நோக்கம் மற்றும் காரணமாகும். 11.01.2021 தேதியிட்ட உத்தரவில் மனுதாரருக்கு இந்த நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது, மனுதாரர் உறுதி ஆவணம் தாக்கல் செய்து, 20.07.2020 தேதியிட்ட உரையாடலை ஒப்புக்கொண்டுள்ளார் மற்றும் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒலி நாடாவின் ஆங்கில மொழி பெயர்ப்பின் திருத்தப்பட்ட வரிவடிவத்தினை இணைப்பு பி 16 ஆக் தாக்கல் செய்துள்ளதால், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் உத்தரவிட்டபடி, நீதிபதி ஆர்.வி. ரவீந்திரனின் விசாரணையைத் தொடர அனுமதிக்க நாங்கள் எந்தக் காரணமும் காணவில்லை. இணைப்பு பி.16 இல் கூறப்பட்டுள்ளவாறு அந்த அளவு வரிவடிவம் அதிகார பூர்வமானது மற்றும் உண்மையானது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால், நீதிபதி ஆர்.வி. ரவிந்திரயிடமிருந்து அறிக்கை கோரும் உத்தரவு தொடர அனுமதிக்கத்தக்கத்

தேவையில்லை என நாங்கள் கருதுகிறோம். அவ்வாறே நாங்கள் உத்தரவிடுகிறோம்.

13. முதல் நிலை எதிர் ஆணையுறுதி ஆவணம் பத்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் மீது முடிவு செய்யும் அளவு தவிர, அசல் நீதிப்பேராணை மனுவிலுள்ள பிரச்சினைகள் மீதான விசாரணையில் எந்த நேரடி கருத்தும் இராது என்பதை அதன் தீர்ப்புரையில் உயர் நீதிமன்றம் தெளிவாகக் கருத்துரைத்துள்ளது. பொ.ந.வ. நிலைக்குந்தன்மை குறித்து முதல் நிலை ஆட்சேபனையின் கேட்புகையை உயர் நீதிமன்றம் 31.7.2020 அன்று முடித்தது, நீ.பே. மனுவை மீண்டும் விசாரிக்க வ.வி. எண் 7 & 8/200 தாக்கல் செய்யப்பட்டபோது, நீ.பே. மனு நிலைக்கத்தக்கதா என் வினா மட்டுமே உயர் நீதிமன்றத்தின் முன்னிருந்தது.

14. நீ.பே. மனுதாரரின் கூற்றுப்படி பொ.ந.வ. நிலைநிறுத்துவது தவிர பிற விடயத்தில் எவ்வித எல்லையும் உயர் நீதிமன்றம் வைத்திருக்கவேண்டியதில்லை, உயர் நீதிமன்றம் முன் தாக்கல்

செய்யப்பட்ட 20.07.2020 தேதியிட்ட உரையாடல் அது போல் கோரப்பட்ட விசாரணை அறிக்கை மேல்சொன்ன காரணத்திற்காகத்தான் என நாங்கள் கருதுகிறோம்.

15. தற்போது 20.7.2020 தேதியிட்ட மொழிபெயர்ப்புக்குபின் வரிவடிவும் இணைப்பு பி 16 ஆக மனுதாரராலேயே தாக்கல் செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில் தேவையெ மேல்சொன்ன வரி வடிவத்தை குறிப்பிட உயர் நீதிமன்றம் நினைத்ததால் அது தற்போதைய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு கொடுத்த பின்னர் மட்டுமே செய்யப்படலாம்.

16. நாங்கள் சிறப்பு அனுமதி மனுவின் அறிவிப்பு வழங்கவோ அல்லது நீதிப்பேராணை மனுவின் தகுதிக் கூறுகளை ஆராயவோ, அல்லது பொது நல வழக்கு தொடர்பான நீதிப்பேராணை எண் 168/ 2020 இன் செல்லுந்தன்மை குறித்து ஏதேனும் கருத்தை தெரிவிக்கவோ இல்லை, உயர் நீதிமன்றம், உத்தரவுகள் எதன் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்டன என்ற வாதக் கூறுகளை

கேட்டப்பின்னர், பொ.ந.வ.–இன் செல்லுந்தன்மை உட்பட நீதிப்பேராணை மனுவை விசாரித்து அதை தீர்மானிக்கவேண்டும்

17. அதன்படி சிறப்பு அனுமதி மனு தீர்வு செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."